# அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில் – ஆனைமலை

## படிவம் –1

| வ. எண் | திருக்கோயிலின் பெயர் மற்றும் தலவரலாறு /அமைவிடம் சுருக்கமாக | முக்கிய திருவிழாக்கள் மாதம் வாரியாக | திருவிழாக் களின் முக்கிய நிகழ்வுகள் தேதி வாரியாக | திருவிழாவின் சிறப்புகள் சுருக்கமாக | தொலை பேசி எண்கள் | Website & E - mail id |
|---|---|---|---|---|---|---|
| 1. | அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில், ஆனைமலை, பொள்ளாச்சி வட்டம், கோவை மாவட்டம்.<br>சங்க காலத்தில் உம்பர்காடான ஆனைமலையில் நடந்த கதை. இப்பகுதியை நன்னன் என்ற குறுநில மன்னன் ஆண்டு வந்தான். இவன் உப்பாற்றின் கரையில் இருந்த தன் அரச தோட்டத்தில் ஒரு மாமரத்தை வளர்த்து வந்தான். அம்மரத்தின் கிளைகளையோ, கனிகளையோ யாரும் பயன்படுத்தக்கூடாது என்றும் ஆணையிட்டிருந்தான். ஒருநாள் ஆழியாற்றில் தன் ஒத்த இளவயது பெண்கள் நீராட வந்த கொங்கிளங்கோசர்களின் குல இளம்பெண் ஒருத்தி அந்த மாமரத்திலிருந்து தானாகவே ஆற்றில் உதிர்ந்து வந்த மாங்கனியை உண்டுவிட்டாள். இது தெரிந்த நன்னன் அவளை கொலை செய்துவிடும்படி உத்தரவிட்டான். அவளது தந்தை அந்தப் பெண்ணின் எடையளவு தங்கத்தால் செய்த பாவை ஒன்றையும், 81 களிற்றையும் அந்தப்பெண் அறியாது செய்த தவறுக்காக தண்டம் இழப்பதாகக் கூறியும் ஏற்காமல் அந்தப் பெண்ணைக் கொலை செய்து விட்டான். பெண் கொலை புரிந்த நன்னனை மக்கள் நாட்டை விட்டே விரட்டி விட்டனர்.<br>கொலை செய்யப்பட்ட அந்தப்பெண்ணை மயானத்தில் சமாதிப்படுத்தி அதன்மீது அந்தப்பெண்ணைப் போன்று ஓர் உருவத்தை மயான மண்ணில் அமைத்து வழிபட்டனர். மயானத்தில் சயனித்த நிலையில் இருந்த அப்பெண் நாளடைவில் மாசாணி என அழைக்கப்பட்டாள். பெண்கொலை புரிந்த அந்த நன்னனை கொங்கிளங் கோசர்கள் படை யெடுத்து அவனைத் தண்டித்து அவனது காவல் மரமான மாமரத்தையும் வெட்டினர் என்பதும் பின்னாளில் தமிழ்புலவர்கள் பெண் கொலைபுரிந்த அந்த நன்னன் மன்னரைக் கூட பிற்காலத்தில் பாட மறுத்துவிட்டனர் என்பதும் வரலாறு. | தை அமாவாசை (27.01.2017) அன்று கொடியேற்றத் துடன் குண்டம் திருவிழா துவங்க உள்ளது. | 27.01.2017 தை அமாவாசையன்று காலை 9.00 மணிக்குமேல் கொடியேற்றத்துடன் **குண்டம் திருவிழா** துவக்கம்.<br>09.02.2017 அன்று நள்ளிரவு 1.00 மணிக்கு மேல் **மயானபூஜை**<br>10.02.2017 அன்று காலை 7.00 மணிக்கு **சக்தி கும்பஸ்தாபனம்**<br>11.02.2017 அன்று இரவு 10.00 மணிக்கு **குண்டம் பூ வளர்த்தல்**<br>12.02.2017 அன்று காலை 8.30 மணிக்கு **குண்டம் இறங்குதல்**<br>13.02.2017 அன்று காலை 9.30 மணிக்கு **மஞ்சள் நீராடல்**<br>14.02.2017 அன்று காலை 11.30 மணிக்கு **மகா அபிசேகத்துடன்** விழா நிறைவு | மயான பூஜையன்று அம்பாள் உருவம் அமைத்து, அருளாளியால் பிடிமண் எடுக்கப்பட்டு சக்தி கும்பஸ்தாபனம் செய்யப்பட்டு திருக்கோயிலில் வைக்கப்பட்டு குண்டம் பூ வளர்த்து, குண்டம் இறங்கி முடிந்தவுடன் அன்று இரவு சக்தி கும்பம் உப்பாற்றில் கரைக்கப்பட்டு அம்பாளை சாந்தப்படுத்த மகா அபிசேகம் செய்யப்பட்டு திருவிழா நிறைவு செய்யப்படுகிறது | 04253 282337 | web site:<br>anaimalaimasaniamman@tnhrce.org<br>e-mail id<br>masaniamman@tnhrce.org |